[1981 பிப்ரவரி 28

திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வில் இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் எனக்குக் கிடைத்த தகவல் இது ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. ஆய்வு செய்யப்பட்டு ஆறு வருடங்கள் ஆகி அது கிடப்பில் இருந்து வருகிறது. இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் அப்பர் டாமிலிருந்து கேரளாவிற்கு செல்லும் பாதையை செப்பனிட்டால் இருபத்தைந்து கிலோ மீட்டர் தான் வரும். நாகர்கோவில் வழியாகவோ அல்லது செங்கோட்டை மூலமாகவோ செல்வதென்றால் 120 கிலோ மீட்டருக்கும் அதிகமான தூரம் செல்லவேண்டியிருக்கிறது. எனவே, போக்குவரத்தைத் துரிதப்படுத்துவதற்காக இந்த திட்டத்தை அரசு மீண்டும் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, அப்பர் டாமிலிருந்து கேரளா வரைக்கும் 12 கிலோ மீட்டர் தூரம் தான் இருக்கிறது. ஆனால் இதற்கு வனப் பாதையின் மூலமாகத் தான் செல்ல வேண்டும். இதற்காக ஆய்வு செய்யப்பட்டபோது நாற்பது இலட்சம் ரூபாய் செலவாகுமென மதிப்பீடு செய்யப்பட்டது. பணம் குறைவாக இருக்கிறதென்பதால் சீரான நேரத்தில் இத்திட்டம் எடுத்துக்கொள்ளப்பெறும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொணம்: தலைவர் அவர்களே, நான் சொன்ன தூரத்தை விட குறைவாகவே சொல்லிவிட்டார்கள். குறைவாக உள்ள தூரத்தில் இன்னும் சொல்லப் போனால் 120 கிலோமீட்டரைவிட இந்த 12 கிலோ மீட்டர் தூரம் எவ்வளவு எளிதானது. போக்குவரத்துக்கு வசதியாகவும், அண்டை மாநிலத்தோடு அதிக தொடர்பு கொள்ளவும் இது மிகவும் உதவிகரமாக இருக்கும். பணத்தை பிரதானமாக கொள்ளாமல் மீண்டும் இந்த திட்டத்தை பரிசீலனை செய்து வழிவகை செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: நிதிநிலைக்கு ஏற்ப தான் சில திட்டங்களை செயல்படுத்த முடியும். அதனால்தான் நிதி நிலை சீரான பிறகு எடுத்துக்கொள்ளப் பெறும் என்று ஏற்கனெவே பதில் சொன்னேன்.

வெட்டாற்றின் குறுக்கே பாலம்.

*வினா எண். 312—திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைஞாயிறு ஒன்றியம், பெரியகுத்தகை—கோவில் பத்து சாலையில் வெட்டாற்றில் 55 எண் துறையில், நாலுவேத பதியில் பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரங்கள் எவை?

1981 பிப்ரவரி 28]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். எஸ். மாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வெட்டாறு, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் மூன்று கிராமங்களை தனியாக பிரித்து வடிகால் வெட்டப்பட்டதால் போக்குவரத்து வசதி இல்லாமல் மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே பாலத்தை அவசியம் கட்ட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இது வகைப்படுத்தபடாத முன்னுரிமை பெறாத சாலை. இதற்கு 15 இலட்சம் செலவாகும். என்று கூறப்பட்டுள்ளது. இது பரிசீலனை செய்த போது, பணம் போதாத காரணத்தால் பிற சாலைகள் என்பதிலே எடுத்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

திரு. எம். எஸ். மாணிக்கம் : தலைவர் அவர்களே, வடிகால் வெட்டப்பட்டதாலே அந்த கிராமங்கள் தனி தீவாக இருக்கின்றன. அங்கே இருக்கிற மக்கள் படகிலே சென்று வரவேண்டிய சூழ்நிலை இருப்பதால் விசேஷ கவனம் எடுத்து பரிசீலனை செய்ய அரசு முன் வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அரசு விசேஷ கவனம் எடுத்து செயல்படுத்தும்.

கோபி நகராட்சி பேருந்து நிலையம்.

*வினா எண். 313—திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோபி நகராட்சியில் உள்ள பேருந்து நிலையத்தை விரிவு படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் வேலை எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.